


# நவராத்திரி பாமாலை

தொகுப்பாசிரியர்

ம.ஜெகநாதன் (ஜெக்கி)

உ

# நவராத்திரி பாமாலை




தொகுப்பாசிரியர்
ம.ஜெகநாதன் (ஜெக்கி)

# நூல் விபரம்

**நூலின் பெயர்:** நவராத்திரி பாமாலை

**தொகுப்பு:**
**வடிவமைப்பு:** } ம.ஜெகநாதன் (ஜெக்கி)

**கணனி தட்டச்சு:**
**ஒப்பு நோக்கல்:** } திருமதி.தர்மராணி ஜெகநாதன்


**இலவச வெளியீடு:** கந்தையா தங்கராசா (சுவிஸ்)

**அச்சுப்பதிவு:** தீபம் பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்

**பதிப்பு:** மே 2019

**பக்கங்கள்:** 6+42

**கருணை பொங்கும் உள்ளம்**
**அது**
**கடவுள் வாழும் இல்லம்**



# ஆசியுரை

உ
சிவமயம்

யாதேவீ ஸர்வ பூதேஷு
மாத்ரு ரூபேன ஸம்ஸ்திதா;
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை
நமோ நமக:;;


எந்த தேவியானவள் எல்லா உலகத்திற்கும் தாயாக இருக்கின்றாளோ, அவளை மீண்டும் மீண்டும் நமஸ்கரிக்கின்றேன்.
நமஸ்கார பிரியையான அம்பிகைக்கு, அன்பர் ம.ஜெகநாதன் ஆக்கித் தரும் "நவராத்திரி பாமாலை" காலத்தின் தேவையுணர்ந்த சிவப்பணியாகும்.

எப்போதும் தேடிக் கற்பதில் தீராத ஆர்வம் கொண்ட ஜெகநாதன் அவர்கள் தான் கற்றவற்றை பிறருக்கும் பயன்படும் வண்ணம் நூல்களாக ஆக்கித் தரும் பணிகள் பாராட்டப்பட வேண்டியவை.

இந்த நவராத்திரி பாமாலையானது அவசியம் அனைத்து வீடுகளிலும் இருக்க வேண்டிய அரும் பொக்கிசம். எனவே இந்த நவராத்திரி பாமாலை யானது மலர்ந்து மணம் பரப்ப வயாவிளான் வைரவசுவாமி திருப்பாதம் பணிகிறேன்.

"லோகா ஸமஸ்தா ஸுகினோ பவந்து"

பிரம்மஸ்ரீ. இராமச்சந்திர இராமலிங்க குரு
வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலயம்



# வாழ்த்துரை

சக்தியை நோக்கி அனுஷ்டிக்கும் விரதங்களில் ஒன்றுதான் நவராத்திரி விரதம். மனிதனுக்கு அவசியமான ஆற்றலின் அதி தேவதையாக விளங்குகின்ற சக்தியைப் போற்றும் விரதமாக கடைப்பிடிக்கப்படுகிறது.

நவராத்திரியில் முதல் மூன்று நாட்களும் இச்சா சக்தியின் தோற்றமான துர்க்கையின் ஆட்சிக் காலம். நடுவில் உள்ள மூன்று நாட்களும் ஞானசக்தியின் தோற்றமான இலக்குமியின் ஆட்சிக்காலம். இறுதி மூன்று நாட்களும் கிரியா சக்தியின் தோற்றமான சரஸ்வதியின் ஆட்சிக்காலம்.

இந்த ஒன்பது நாட்களிலும் ஆலயங்களிலும் இல்லங்களிலும் தொடர்ந்து விரதமிருந்து வழிபடுவார்கள். நவராத்திரியில் திருமகளைத் துதித்து வழிபடுவோர்களுக்கு தேவியானவள் சகல சௌபாக்கியங்களையும் நல்குவாள் என்பது மட்டுமல்லாமல் வீடுபேறாகிய முக்தியையும் நல்குவாள் என்பது ஐதீகம்.

“நவராத்திரி பாமாலை” என்னும் இந்நூலில் முப்பெருந்தேவியர்களுக்கும் உரிய பாடல்கள் குறிப்பாக 108 போற்றிகள், அததற்குரிய பகுதிகளில் விசேடமாக தரப்பட்டுள்ளமை சிறப்பானதாகும். புரிந்து கொள்ளக் கூடிய விளக்கங்களுடனும் அமையப்பெற்ற இந்நூல் எம் மக்களுக்கு மிகவும் பயனுடையதாகும். இக்கலியுகத்தில் ஒவ்வொரு வரும் நவராத்திரி காலங்களில் மட்டுமல்லாது தினந்தோறும் இவற்றைப் படித்தல் அவசியம். இதனால் வீட்டிலும், நாட்டிலும் சாந்தி நிலவி சகல சௌபாக்கியங்களும் அமையப்பெறும்.

அந்தவகையில் நூலின் தொகுப்பாசிரியர் திரு.ம.ஜெகநாதன் பாராட்டுக் குரியவர். அவரின் பணி சிறக்க வசந்தநாகபூசணி அம்மன் துணை நிற்பாள்.

வசந்தநாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்
களவாவோடை, ஏழாலை

# என்னுரை

இந்துக்களிடையே சக்தி வழிபாடு மிகவும் மேலான இடத்தைப் பெறுகிறது. இச்சக்தி வழிபாட்டிலே நவராத்திரி வழிபாடு முதன்மையானதும், சிறப்பு மிக்கதுமாகும். சக்தியின் உயர்வை, பெண்மையின் பெருமைகளை, பெண்களின் ஆற்றலை வெளிப்படுத்துகின்ற ஒப்பற்ற ஒன்பது நாள் திருவிழாதான் நவராத்திரி விழா.

புரட்டாதி மாதத்தில் வரும் அவாமாசைக்கு மறுநாளில் இருந்து ஒன்பது நாட்கள் செய்யப்படும் இந்த சக்தி வழிபாடு பெண்களுக்கே உரியது.

நவராத்திரி வழிபாட்டிற்கு ஏற்றதான பாடல்களை வகைப்படுத்தி தெளிவாக வும், விரிவாகவும் தொகுத்து தரப்பட்டுள்ளது. பாடல்களுக்குரிய விளக்கக் குறிப்புக்கள் படிப்போரின் ஆர்வத்தை தூண்டி பாடலுடன் இயல்பாக ஒன்றிப் போக ஏதுவாகும்.

பாடல் தெரிவுகள், கணனி தட்டச்சு, ஒப்புநோக்கல் என பல்வேறுபட்ட பணிகளை செய்து ஊக்குவித்த எனது மனைவி திருமதி. தர்மராணி அவர்களின் பணியானது இந்நூலை அழகுற வெளிக்கொணர உதவியது. இவருக்கு எனது அன்பு நிறைந்த நன்றிகள்.

இந்நூல் இலவச வெளியீடாக வெளிவர நிதிப்பங்களிப்பு செய்த திரு.கந்தையா தங்கராசா அவர்கள் எனது நன்றிக்குரியவர்.

எனது குலதெய்வம் (வயாவிளான் தெற்கு) ஞானவைரவர் ஆலயத்தின் பிரதமகுரு பிரம்மஸ்ரீ இரா.இராமலிங்கசர்மா அவர்களின் ஆசியுரை இந்நூலிற்கு அணி சேர்க்கிறது. எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

ஏழாலை களவாவோடை வசந்தநாகபூசணி அம்பாள் தேவஸ்தானம் மூலம் இறைபணிக்கு அப்பால் அறநிலையங்களை உருவாக்கி ஆதரவற்ற சிறுவர்கள், முதியவர்களை பராமரித்தல் மற்றும் பல வழிகளிலும் செய்யும் தூய தொண்டுகளாலும், கண்ட அற்புதங்களாலும் உயர்வுகள் பல கண்ட அன்னை அவர்களின் வாழ்த்துரை இந்நூலிற்கு பெருமை சேர்த்துள்ளது. அவர்களுக்கு உளமார்ந்த நன்றியை சமர்ப்பித்து மகிழ்கிறேன்.

கூட்டு வழிபாட்டு முறையை வலியுறுத்தும் சக்தி வழிபாடு நம் சஞ்சலத்தைத் தீர்த்து வாழ்வில் என்றும் சந்தோசத்தைத் தரும்.

– ம.ஜெகநாதன்
வயாவிளான் தெற்கு

## உள்ளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| 1. முன்னுரை ... ... | .. 01 |
| 2. சகலகலாவல்லி மாலை ... | .. 02 |
| 3. துர்க்கா ரோக நிவாரண அஷ்டகம் | .. 04 |
| 4. ஸ்ரீ துர்க்கா ஸ்தோத்திரம் ... | .. 06 |
| 5. ஸ்ரீ ராகுகால துர்க்கா அஸ்டகம் | .. 07 |
| 6. துர்க்கை அம்மன் 108 போற்றி | .. 09 |
| 7. திருமகள் துதி (பாரதியார் கவிதை) | .. 13 |
| 8. திருமகள் துதி (அகத்தியர் அருளியது) | .. 14 |
| 9. திருமகள் 108 போற்றி ... | .. 16 |
| 10. சரஸ்வதி துதி ... ... | .. 20 |
| 11. சரஸ்வதி 108 போற்றி ... | .. 21 |
| 12. மஹிஷாசுரமர்த்தினி ஸ்தோத்திரம் | .. 25 |
| 13. திருவிளக்கு 108 போற்றி ... | .. 28 |
| 14. ஸ்ரீ லலிதா நவரத்தின மாலை | .. 32 |
| 15. துக்க நிவாரண அஷ்டகம் ... | .. 36 |
| 16. குங்குமம் கவசம் ... | .. 38 |
| 17. நவராத்திரி கொலு ... | .. 41 |




# முன்னுரை

மகிசாசுரன் என்ற அரக்கன் மக்களை துன்புறுத்தியபோது, தங்களைக் காப்பாற்றி அருளுமாறு ஆதிபராசக்தியிடம் அனைவரும் முறையிட்டனர். அன்னை ஒன்பது நாட்கள் போரிட்டு பத்தாவது நாள் மகிசாசுரனை வதம்செய்து வெற்றி கொண்டாள். அந் நிகழ்ச்சியைக் கொண்டாடுவதே நவராத்திரி எனப் புராணங்கள் கூறுகின்றன.

மனிதனின் முக்கிய தேவைகளான வீரம், செல்வம், கல்வி, இம்மூன்றையும் வேண்டி அவற்றுக்கு அதிபதிகளான துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி என்று மூன்று சக்தி அம்சங்களையும் வழிபடுதலே இவ்விரதத்தின் நோக்கமாகும். முதல் மூன்று நாட்களில் வீரத்தையும், தைரியத்தையும் வேண்டி துர்க்கையையும், அடுத்த மூன்று நாட்களும் செல்வத்தை வேண்டி இலக்குமியையும், இறுதி மூன்று நாட்களும் கல்வி, அறிவு, சகல கலை ஞானங்கள் என்பவற்றை வேண்டிச் சரஸ்வதி தேவியையும் வழிபட வேண்டும்.

சக்தியின் ஒன்பது வடிவமானது துர்கா, பத்ரகாளி, ஜகதம்பா, அன்னபூர்ணா, சர்வமங்களா, பைரவி, சண்டிகா, லலிதா, பவானி மற்றும் மூகாம்பிகா என்று போற்றப்படுகிறது.

## விஜயதசமி

இது நவமியில் நிகழ்ந்ததாகவும் மறுநாள் தசமியில் தேவர்கள் வெற்றியை ஆயுத பூசை செய்து கொண்டாடியபடியால், விஜயதசமி என்றும் வழங்கலாயிற்று என்று சொல்வது உண்டு.

## கன்னி வாழை வெட்டல்

விஜயதசமி அன்று வன்னி மரத்துடன் கூடிய வாழை மரத்தை வெட்டுவது கோவில்களில் வழக்கமாக உள்ளது. ஒரு முறை பண்டாசுரனுடன், பார்வதி தேவி போர் புரிந்தார். பலமுறை போரிட்டும், பார்வதி தேவியால், பண்டாசுரனை அழிக்க முடியவில்லை. இதையடுத்து பார்வதி தேவி, சிவபெருமானை வேண்டினார். அப்போது சிவபெருமான், விஜயதசமியில் போரிடும்படி கூறினார். அதன்படி பார்வதியும், விஜயதசமி தினம் ஒன்றில் பண்டாசுரனுடன் போரிட்டார்.

அப்போது போரில் தோல்வியுற்ற பண்டாசுரன், வன்னி மரத்தில் புகுந்து ஒளிந்துகொண்டான். இதனை பார்த்ததும் பார்வதிதேவி, வன்னி மரத்தை வெட்டி, அதில் ஒளிந்திருந்த அசுரனை சம்ஹாரம் செய்தார். இதுவே நாளடைவில் கன்னிவாழை வெட்டு என்று மருவி வழங்கப்பட லாயிற்று. பண்டாசுரனை அழித்த மாலை வேளையில், இதனை நினைவு கூரும் விதமாக வாழை மரத்தை வெட்டும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது.

# சகலகலாவல்லி மாலை

குமரகுரு சுவாமிகள் கலைமகளை வேண்டி அழகிய தமிழில் பாடிய பாமாலையாகும். இது நவராத்திரி காலங்களில் ஒன்பது நாளும் சைவ மக்களால் பாடப்பட்டு வருகிறது.

திருச்சிற்றம்பலம்

வெண் தாமரைக்கு அன்றி நின் பதம் தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க வொழித்தான் பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே. -1

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய் தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய் பங்கயாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றும் ஐம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே சகல கலாவல்லியே. -2

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்அமுது ஆர்ந்துன் அருட் கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடும் கோலொ உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே சகல கலாவல்லியே. -3

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த கல்வியும் சொற் சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே சகல கலாவல்லியே. -4

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற்பாதம் பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராது என்னே நெடுந்தாட் கமலது
அஞ்சத் துவசம் உயர்த்தோன் செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத்தவிசு ஒத்திருந்தாய் சகல கலாவல்லியே. -5

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளித எய்த நல்காய் எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே. -6

பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும் படிநின் கடைக் கண் நல்காய் உளங் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலாவல்லியே. -7

சொல்விற் பனமும் அவதானமும் கவி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய் நளினாசனஞ்சேர்
செல்விக்கு அரிது என்றொரு காலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெரும் செல்வப் பேறே சகல கலாவல்லியே. -8

சொற்கும் பொருட்கும் உயிராம் மெய் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலந்தோய் புழைக்கை
நற் குஞ்சரத்தின் பிடியோடு அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே சகல கலாவல்லியே. -9

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்ட அளவிற் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளம்பிலும் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகல கலாவல்லியே. -10

திருச்சிற்றம்பலம்



# துர்க்கா ரோக நிவாரண அஷ்டகம்

## (சித்தர் அருளியது)

**துர்க்கையை மனதில் நினைத்து இந்த அஷ்டகத்தை தினமும் பாராயணம் செய்து வந்தால் நோயற்ற சுகமான வாழ்வு அமையும். நோயாளிகளின் ரோக நிவாரணத்திற்காக மற்றவர்கள் அவர்களின் அருகில் இருந்தும் படித்து பயன்பெறலாம்.**

பகவதி தேவி பர்வத தேவி
பலமிகு தேவி துர்கையளே
ஜகமது யாவும் ஜயஜயவெனவே
சங்கரி உன்னைப் பாடிடுமே
ஹநஹந தகதக பசபச வெனவே
தளிர்த்திடு ஜோதியானவளே
ரோக நிவாரிணி சோக நிவாரிணி
தாப நிவாரிணி ஜெயா துர்கா. ....... (01)

தண்டினி_தேவி தக்ஷினி தேவி
கட்கினி தேவி துர்கையளே
தந்தன தான தனதன தான
தாண்டவ நடன ஈஸ்வரியே
முந்தினி தேவி முனையோலி சூலி
முனிவர்கள் தேவி மணித்தேவி
ரோக நிவாரிணி சோக நிவாரிணி
தாப நிவாரிணி ஜெயா துர்கா. ....... (02)

காளினி நீயே காமினி நீயே
கார்த்திகை நீயே துர்கையளே
நீலினி நீயே நீதினி நீயே
நீர்நிதி நீயே நீர் ஒளியே
மாலினி நீயே மாதினி நீயே
மாதவி நீயே மான் விழியே
ரோக நிவாரிணி சோக நிவாரிணி
தாப நிவாரிணி ஜெயா துர்கா. ....... (03)

நாரணி மாயே நான்முகன் தாயே
நாகினி யாயே துர்கையளே
ஊரணி மாயே ஊற்று தாயே
ஊர்த்துவ யாயே ஊர் ஒளியே
காரணி மாயே காருணி தாயே
காணக யாயே காசினியே
ரோக நிவாரிணி சோக நிவாரிணி
தாப நிவாரிணி ஜெயா துர்கா. ....... (04)

திருமகளானாய் கலைமகளானாய்
மலைமகளானாய் துர்க்கையளே
பெருநிதி யானாய் பேரறி வானாய்
பெருவலி வானாய் பெண்மையளே
நறுமலரானாய் நல்லவளானாய்
நந்தினி யானாய் நங்கையளே
ரோக நிவாரணி சோக நிவாரணி
தாப நிவாரணி ஜெய துர்க்கா. ....... (05)

வேதமும் நீயே வேதியள் நீயே
வேகமும் நீயே துர்கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே
நாணமும் நீயே நாயகியே
மாதமும் நீயே மாதவம் நீயே
மானமும் நீயே மாயவளே
ரோக நிவாரிணி சோக நிவாரிணி
தாப நிவாரிணி ஜெயா துர்கா. ....... (06)

கோவுறை ஜோதி கோமள ஜோதி
கோமதி ஜோதி துர்கையளே
நாவுறை ஜோதி நாற்றிசை ஜோதி
நாட்டிய ஜோதி நாச்சியளே
பூவுறை ஜோதி பூரண ஜோதி
பூதநற் ஜோதி பூரணியே
ரோக நிவாரிணி சோக நிவாரிணி
தாப நிவாரிணி ஜெயா துர்கா. ....... (07)

ஜெய ஜெய சைல புத்திரி ப்ரஹ்ம
சாரிணி சந்திர கண்டினியே
ஜெய ஜெய கூஷ்மா மாண்டினி ஸ்கந்த
மாதினி காத்யாயினி யளே
ஜெய ஜெய காலராத்திரி கௌரி
ஸித்திதா ஸ்ரீ நவ துர்க்கையளே
ரோக நிவாரிணி சோக நிவாரிணி
தாப நிவாரிணி ஜெயா துர்கா. ....... (08)

திருச்சிற்றம்பலம்

# துர்க்கா ஸ்தோத்திரம்

ஜெயஜெய தேவி ஜெயஜெய தேவி துர்கா தேவி சரணம்
ஜெயஜெய தேவி ஜெயஜெய தேவி துர்கா தேவி சரணம்

துர்கையம்மனை துதித்தால் என்றும் துன்பம் பறந்தோடும்
தர்மம் காக்கும் தாயாம் அவளே தரிசனம் கண்டால் போதும்
கர்ம வினைகளும் ஓடும் சர்வ மங்களம் கூடும்
(ஜெய ஜெய)

பொற்கரங்கள் பதினெட்டும் நம்மை சுற்றி வரும் பகை விரட்டும்
நெற்றியிலே குங்கும பொட்டும் வெற்றி பாதையைக் காட்டும்
ஆயிரம் கரங்கள் உடையவளே ஆதி சக்தி அவள் பெரியவளே
ஆயிரம் நாமங்கள் கொண்டவளே தாய்போல் நம்மைக் காப்பவளே
(ஜெய ஜெய)

சங்கு சக்ரம் வில்லும் அம்பும் மின்னும் வாளும் வேலுடன் சூலமும்
தங்க கைகளில் தாங்கி நிற்பாள் -- தங்க சிங்கத்தின் மேல்
அவள் வீற்றிருப்பாள்
திங்களை முடிமேல் சூடி நிற்பாள் மங்கள வாழ்வையும் தந்திடுவாள்
மங்கையர்க்கரசியும் அவளே அங்கையற்கண்ணியும் அவளே
(ஜெய ஜெய)



# ஸ்ரீ ராகுகால துர்க்கா அஷ்டகம்

துர்க்கா அஷ்டகம் சித்தர் அருளியது. துன்பம் நீங்கி ஆறுதல் பெற ராகுகாலத்தில் துர்க்கைமுன் நெய்விளக்கு ஏற்றிப் பாடவேண்டும். இதனால் திருமணதடை நீங்குதல், மாங்கல்ய பாக்கியம், குழந்தை பாக்கியம் ஆகிய பலன்கள் கிடைக்கும்.

வாழ்வு ஆனவள் துர்கா வாக்குமானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தனள்
தாழ்வு அற்றவள் துர்கா தாயுமானவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

உலகையீன்றவள் துர்கா உமையுமானவள்
உண்மையானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்கா நித்யையானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

செம்மையானவள் துர்கா செபமுமானவள்
அம்மையானவள் அன்புத் தந்தையானவள்
இம்மை ஆனவள் துர்கா இன்பமானவள்
மும்மையானவள் என்றும் முழுமையானவள்
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

உயிருமானவள் துர்கா உடலுமானவள்
உலகமானவள் எந்தன் உடமையானவள்
பயிருமானவள் துர்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

துன்பமற்றவள் துர்கா துரிய வாழ்பவள்
துறையுமானவள் இன்பத் தோணி யானவள்
அன்பு உற்றவள் துர்கா அபய வீடவள்
நன்மை தங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

குருவுமானவள் துர்கா குழந்தையானவள்
குலமுமானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவுமானவள் துர்கா திருசூலி மாயவள்
திருநீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயை வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

கன்னி துர்க்கையே இதயக் கமலா துர்க்கையே
கருணை துர்க்கையே வீரக் கனக துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே



# துர்க்கை அம்மன் 108 போற்றி

கிரகங்களில் ராகுவிற்குரிய அதிதேவதை துர்க்கை. ராகு பெயர்ச்சியால் சிரமப்படும் ராசியினர் இந்த போற்றியை தினமும் சொல்லிவந்தால் சர்வ நலன்களும் உண்டாகும். பார்வதி தேவியின் ஆங்கார வடிவங்களுள் ஒன்றாக திகழும் துர்க்கை அம்மனை போற்றி வழிபடுவோரிடம் தீய சக்திகள் அண்டாது என்பது திண்ணம். வாழ்வில் எல்லா துன்பங்களை யும் போக்கும்; தோஷங்களை நீக்கும்.

1. ஓம் அகிலாண்ட நாயகியே போற்றி
2. ஓம் அஷ்டமி நாயகியே போற்றி
3. ஓம் அபயம் தருபவளே போற்றி
4. ஓம் அசுரரை வென்றவளே போற்றி
5. ஓம் அன்பர்க்கு எளியவளே போற்றி
6. ஓம் அமரரைக் காப்பவளே போற்றி
7. ஓம் அறம் வளர்க்கும் தாயே போற்றி
8. ஓம் அருள்நிறை அன்னையே போற்றி
9. ஓம் அருளைப் பொழிபவளே போற்றி
10. ஓம் ஆதாரம் ஆனவளே போற்றி
11. ஓம் ஆலால சுந்தரியே போற்றி
12. ஓம் ஆதியின் பாதியே போற்றி
13. ஓம் இன்னருள் சுரப்பவளே போற்றி
14. ஓம் இணையில்லா நாயகியே போற்றி
15. ஓம் இல்லாமை ஒழிப்பாய் போற்றி
16. ஓம் இடபத்தோன் துணையே போற்றி
17. ஓம் ஈர மனத்தினளே போற்றி
18. ஓம் ஈடிணையற்றவளே போற்றி

19. ஓம் ஈஸ்வரன் துணையே போற்றி
20. ஓம் உக்ரரூபம் கொண்டவளே போற்றி
21. ஓம் உன்மத்தின் கரம் பிடித்தாய் போற்றி
22. ஓம் உள்ளொளியாய் ஒளிர்பவளே போற்றி
23. ஓம் ஊழ்வினை தீர்ப்பாய் போற்றி
24. ஓம் எண் கரம் கொண்டவளே போற்றி
25. ஓம் எலுமிச்சமாலை அணிபவளே போற்றி
26. ஓம் ஏழுலகும் வென்றவளே போற்றி
27. ஓம் ஏழ்மை அகற்றுபவளே போற்றி
28. ஓம் ஐங்கரன் அன்னையே போற்றி
29. ஓம் ஒளிமணி தீபத்தாயே போற்றி
30. ஓம் ஓங்கார சுந்தரியே போற்றி
31. ஓம் கற்பனை கடந்த கற்பகமே போற்றி
32. ஓம் கவலையைத் தீர்ப்பவளே போற்றி
33. ஓம் காருண்ய மனம் படைத்தவளே போற்றி
34. ஓம் காளியே நீலியே போற்றி
35. ஓம் காபாலியை மணந்தவளே போற்றி
36. ஓம் காவல் நிற்கும் கன்னியே போற்றி
37. ஓம் கிரிராஜன் மகளே போற்றி
38. ஓம் கிருஷ்ண சகோதரியே போற்றி
39. ஓம் குமரனைப் பெற்றவளே போற்றி
40. ஓம் குறுநகை கொண்டவளே போற்றி
41. ஓம் குங்கும நாயகியே போற்றி
42. ஓம் குலம் விளங்கச் செய்தவளே போற்றி
43. ஓம் கிரியா சக்தி நாயகியே போற்றி
44. ஓம் கோள்களை வென்றவளே போற்றி
45. ஓம் சண்டிகேஸ்வரியே தாயே போற்றி
46. ஓம் சர்வ சக்தி படைத்தவளே போற்றி
47. ஓம் சந்தனத்தில் குளிப்பவளே போற்றி
48. ஓம் சர்வ அலங்காரப் பிரியையே போற்றி
49. ஓம் சாமுண்டி ஈஸ்வரியே போற்றி
50. ஓம் சங்கரன் துணைவியே போற்றி
51. ஓம் சங்கடம் தீர்ப்பவளே போற்றி
52. ஓம் சிவன்கரம் பிடித்தவளே போற்றி
53. ஓம் சிங்கார வல்லியே போற்றி
54. ஓம் சிம்மவாகனநாயகியே போற்றி

55. ஓம் சியாமள நிறத்தாளே போற்றி
56. ஓம் சித்தி அளிப்பவளே போற்றி
57. ஓம் செவ்வண்ணப் பிரியையே போற்றி
58. ஓம் ஜெய ஜெய துர்கா தேவியே போற்றி
59. ஓம் ஜோதி சொரூபமானவளே போற்றி
60. ஓம் ஞானம் அருளும் செல்வியே போற்றி
61. ஓம் ஞானக்கனல் கொண்டவளே போற்றி
62. ஓம் ஞாலம் காக்கும் நாயகியே போற்றி
63. ஓம் தயாபரியே தாயே போற்றி
64. ஓம் திருவெலாம் தருவாய் போற்றி
65. ஓம் திரிபுர சுந்தரியே போற்றி
66. ஓம் தீமையை அழிப்பாய் போற்றி
67. ஓம் துஷ்ட நிக்ரஹம் செய்பவளே போற்றி
68. ஓம் துர்கா பரமேஸ்வரியே போற்றி
69. ஓம் நன்மை அருள்பவளே போற்றி
70. ஓம் நவசக்தி நாயகியே போற்றி
71. ஓம் நவகோணத்தில் உறைபவளே போற்றி
72. ஓம் நிமலையே விமலையே போற்றி
73. ஓம் நிலாப்பிறை சூடியவளே போற்றி
74. ஓம் நிறைசெல்வம் தருவாய் போற்றி
75. ஓம் நின்னடி பணிந்தோம் போற்றி
76. ஓம் பக்தர்க்கு அருள்பவளே போற்றி
77. ஓம் பரமானந்தப் பெருக்கே போற்றி
78. ஓம் பயிரவியே தாயே போற்றி
79. ஓம் பயத்தைப் போக்குபவளே போற்றி
80. ஓம் பயங்கரி சங்கரியே போற்றி
81. ஓம் பார்வதிதேவியே போற்றி
82. ஓம் புவனம் படைத்தவளே போற்றி
83. ஓம் புண்ணியம் மிக்கவளே போற்றி
84. ஓம் பூவண்ணன் தங்கையே போற்றி
85. ஓம் மகிஷாசுர மர்த்தினியே போற்றி
86. ஓம் மங்கல நாயகியே போற்றி
87. ஓம் மகேஸ்வரித் தாயே போற்றி
88. ஓம் மங்கையர்க்கரசியே போற்றி
89. ஓம் மகமாயித் தாயே போற்றி
90. ஓம் மாதர் தலைவியே போற்றி

91. ஓம் மாங்கல்யம் காப்பாய் போற்றி
92. ஓம் மாணிக்கவல்லியே போற்றி
93. ஓம் மாயோன் தங்கையே போற்றி
94. ஓம் முக்கண்ணி நாயகியே போற்றி
95. ஓம் முக்தியளிப்பவளே போற்றி
96. ஓம் முக்கண்ணன் தலைவியே போற்றி
97. ஓம் மூலப்பரம்பொருளே போற்றி
98. ஓம் மூவுலகம் ஆள்பவளே போற்றி
99. ஓம் யசோதை புத்திரியே போற்றி
100. ஓம் யமபயம் போக்குபவளே போற்றி
101. ஓம் ராகுகால துர்க்கையே போற்றி
102. ஓம் ரவுத்தரம் கொண்டவளே போற்றி
103. ஓம் வல்லமை மிக்கவளே போற்றி
104. ஓம் வாழ்வருளும் அம்மையே போற்றி
105. ஓம் விஷ்ணு துர்க்கையே போற்றி
106. ஓம் வீர நெஞ்சத்தவளே போற்றி
107. ஓம் வைஷ்ணவித்தாயே போற்றி
108. ஓம் வையகம் வாழ்விப்பாய் போற்றி



# திருமகள் துதி
## (பாரதியார் கவிதைகள்)

இலட்சுமியின் பார்வை பட்டால் பஞ்சம் யாவும் நீங்கி பாரினில் செல்வம் சேரும் என்று புராணங்கள் கூறுகின்றன. இந்தத் துதி எங்கெல்லாம் பாடப்படுகிறதோ அங்கெல்லாம் எழுந்தருளுவாள் திருமகள். பூமகள் அருள் வேண்டிப் பாடிய இத்துதியை அவளை நினைத்தபடி விளக்கேற்றி வைத்துச் சொல்லுங்கள். அன்னையின் அருளால் நிலை யான செல்வம் சேரும்.

நித்தமுனை வேண்டி மனம் நினைப்ப தெல்லாம் நீயாய்ப்
பித்தனைப்போல் வாழ்வதிலே பெருமையுண்டோ? திருவே!
சித்தவுறுதி கொண்டிருந்தார் செய்கை யெல்லாம் வெற்றி கொண்டே
உத்தமநிலை சேர்வ ரென்றே உயர்ந்த வேதமுரைப்ப தெல்லாம்,
சுத்த வெறும் பொய்யோடீ? சுடர் மணியே!திருவே!
மெத்த மையல் கொண்டு விட்டேன் மேவிடுவாய்,திருவே!

உன்னையன்றி இன்ப முண்டோ உலகமிசை வேறே!
பொன்னை வடிவென் றுடையாய் புத்தமுதே,திருவே!
மின்னொளி தருநன் மணிகள் மேடை யுயர்ந்த மாளிகைகள்
வன்ன முடைய தாமரைப் பூ மணிக்குள முள்ள சோலைகளும்,
அன்னம் நறு நெய் பாலும் அதிசயமாத் தருவாய்!
நின்னருளை வாழ்த்தி என்றும் நிலைத்திருப்பேன்,திருவே!

ஆடுகளும் மாடுகளும் அழகுடைய பரியும்
வீடுகளும் நெடுநிலமும் விரைவினிலே தருவாய்!
ஈடு நினக்கோர் தெய்வமுண்டோ? எனக்குனை யன்றிச் சரணுமுண்டோ?
வாடு நிலத்தைக் கண் டிரங்கா மழையினைப் போல் உள்ள முண்டோ
நாடு மணிச் செல்வ மேல்லாம் நன்கருள்வாய், திருவே!
பீடுடைய வான் பொருளே பெருங் களியே, திருவே!



# திருமகள் துதி

## (அகத்தியர் அருளியது)

செல்வம் பெருகவும், கடன்தொல்லை தீரவும் உதவும் வகையில் அகத்திய மாமுனியால் இயற்றப்பட்டது. திடமான நம்பிக்கையுடன் நம் குறைகளைக் களைந்து இந்த பாடலை தினமும் பக்தியுடன் பாடிவந்தால் இல்லத்தில் சுபீட்சம் பொங்கும், திருமகள் கண் திறப்பாள்.

மூவுலகம் இடரியற்றும் அடலவுணர்
உயிரொழிய முனிவு கூர்ந்த
பூவைஉறழ் திருமேனி அருட்கடவுள்
அகன்மார்பில் பொலிந்து தோன்றித்
தேவர் உலகினும் விளங்கும் புகழ்க்கொல்லா
புரத்தினிது சேர்ந்து வைகும்
பாவைஇரு தாள்தொழுது பழமறைதேர்
குறுமுனிவன் பழிச்சு கின்றான்

கொழுதியிசை அளிமுரலும் தாமரைமென்
பொகுட்டி லுறை கொள்கைபோல
மழையுறழுந் திருமேனி மணிவண்ணன்
இதயமலர் வைகு மானே
முழுதுலகும் இனிதீன்ற அருட்கொம்பே
கரகமலம் முகிழ்த்தெந் நாளுங்
கழிபெருங்கா தலில்தொழுவோர் வினைதீர
அருள்கொழிக்குங் கமலக் கண்ணாய்.

கமலைதிரு மறுமார்பன் மனைக்கிழத்தி
செழுங்கமலக் கையாய் செய்ய
விமலைபசுங் கழைகுழைக்கும் வேனிலோன்
தனையீன்ற விந்தை தூய
அமுதகும்ப மலர்க்கரத்தாய் பாற்கடலுள்
அவதரித்தோய் அன்பர் நெஞ்சத்
திமிரமகன் றிடவொளிருஞ் செழுஞ்சுடரே
எனவணக்கஞ் செய்வான் மன்னோ.

மடற்கமல நறும்பொ குட்டில் அரசிருக்கும்
செந்துவர்வாய் மயிலே மற்றுன்
கடைக்கணருள் படைத்தன்றோ மணிவண்ணன்
உலகமெலாம் காவல் பூண்டான்.
படைத்தனன்நான் முகக்கிழவன் பசுங்குழவி
மதிபுனைந்த பரமன் தானும்
துடைத்தனன்நின் பெருஞ் கீர்த்தி எம்
மனோரால் எடுத்துச் சொல்லற் மாற்றோ.

மல்லல்நெடும் புவியனைத்தும் பொதுநீக்கித்
தனிபுரக்கு மன்னர் தாமும்
கல்வியினில் பேரறிவில் கட்டழகில்
நிகரில்லாக் காட்சி யோடும்
வெல்படையில் பகைதுரந்து வெஞ்சமரில்
வாகைபுனை வீரர் தாமும்
அல்லிமலர்ப் பொகுட்டுறையும் அணியிழைநின்
அருள்நோக்கம் அடைந்துள்ளாரே.

செங்கமலப் பொலந்தாதில் திகழ்ந்தொளிரும்
எழின்மேனித் திருவே வேலை
அங்கண்உல கிருள்துலக்கும் அலர்கதிராய்
வெண்மதியாய் அமரர்க் கூட்டும்
பொங்கழலாய் உலகளிக்கும் பூங்கொடியே
நெடுங்கானில் பொருப்பில் மண்ணில்
எங்குளைநீ அவனன்றோ மல்லல்வளம்
சிறந்தோங்கி இருப்ப தம்மா.

என்றுதமிழ்க் குறுமுனிவன் பன்னியொடும்
இருநிலத்தில் இறைஞ்சலோடும்
நன்றுனது துதிமகிழ்ந்தோம் நான்மறையோய்
இத்துதியை நவின்றோர் யாரும்
பொன்றலரும் பெரும்போகம் நுகர்ந்திடுவர்
ஈங்கிதனைப் பொறித்த ஏடு
மன்றல்மனை அகத்திருப்பின் வறுமைதரு
தவ்வை அவண் மருவல் செய்யாள்.



# திருமகள் 108 போற்றி

வீட்டில் இலட்சுமிகரம் நிறைந்து இருக்க ஆடம்பரமான பூசையோ, பெரிய பெரிய மந்திரங்களோ சொல்ல வேண்டும் என்பதில்லை. எம்மால் முடிந்த எளிய பூஜைகளும், எளிய துதிகளுமே போதுமானது. தினமும் இந்த போற்றியை உள்ளன்போடு சொன்னாலே போதும். திருமகள் உள்ளம் மகிழ்ந்து நம் இல்லத்தில் இருப்பாள்.

1. ஓம் திருவே போற்றி
2. ஓம் திருவளர் தாயே போற்றி
3. ஓம் திருமாலின் தேவி போற்றி
4. ஓம் திருவெலாம் தருவாய் போற்றி
5. ஓம் திருத்தொண்டர் மணியே போற்றி
6. ஓம் திருப்புக ழுடையாய் போற்றி
7. ஓம் திருஞான வல்லி போற்றி
8. ஓம் திருவருட் செல்வி போற்றி
9. ஓம் திருமால் மகிழ்வாய் போற்றி
10. ஓம் திருமார்பிலமர்ந்தாய் போற்றி

11. ஓம் தினமெம்மைக் காப்பாய் போற்றி
12. ஓம் தூபஜோதியே போற்றி
13. ஓம் துயரந்தீர்த்தருள்வாய் போற்ற
14. ஓம் திருப்பாற் கடலாய் போற்றி
15. ஓம் திருவமுதருள்வாய் போற்றி
16. ஓம் அன்னையே அருளே போற்றி
17. ஓம் அழகெலாம் உடையாய் போற்றி
18. ஓம் அயன்பெறுதாயே போற்றி
19. ஓம் அறுமுகன் மாமி போற்றி
20. ஓம் அமரர்குல விளக்கே போற்றி
21. ஓம் அமரேசன் தொழுவாய் போற்றி
22. ஓம் அன்பருக்கினியாய் போற்றி
23. ஓம் அண்டங்கள் காப்பாய் போற்றி
24. ஓம் ஆனந்தவல்லியே போற்றி
25. ஓம் ஆருயிர்க்குயிரே போற்றி
26. ஓம் ஆவிநல் வடிவே போற்றி
27. ஓம் ஆக்கம தருள்வாய் போற்றி
28. ஓம் இச்சை கிரியை போற்றி
29. ஓம் இருள் தனைக் கடிவாய் போற்றி
30. ஓம் இன்பப்பெருக்கே போற்றி
31. ஓம் இகபரசுகமே போற்றி
32. ஓம் ஈகையின் பொலிவே போற்றி
33. ஓம் ஈறிலா அன்னை போற்றி
34. ஓம் எங்குமே நிறைந்தாய் போற்றி
35. ஓம் எண்குணவல்லி போற்றி
36. ஓம் ஓங்கார சத்தி போற்றி
37. ஓம் ஒளிமிகு தேவி போற்றி
38. ஓம் கற்பகவல்லி போற்றி
39. ஓம் காமரு தேவி போற்றி
40. ஓம் கனகவல்லியே போற்றி
41. ஓம் கருணாம்பிகையே போற்றி
42. ஓம் குத்துவிளக்கே போற்றி
43. ஓம் குலமகள் தொழுவாய் போற்றி
44. ஓம் மங்கல விளக்கே போற்றி
45. ஓம் மங்கையர் தொழுவாய் போற்றி
46. ஓம் தூங்காத விளக்கே போற்றி

47. ஓம் தூயவர் தொழுவாய் போற்றி
48. ஓம் பங்கசவல்லி போற்றி
49. ஓம் பாவலர் பணிவாய் போற்றி
50. ஓம் பொன்னி அம்மையே போற்றி
51. ஓம் புலவர்கள் புகழ்வாய் போற்றி
52. ஓம் நாரணன் நங்கையே போற்றி
53. ஓம் நாவலர் துதிப்பாய் போற்றி
54. ஓம் நவரத்தினமணியே போற்றி
55. ஓம் நவநிதி நீயே போற்றி
56. ஓம் அஷ்ட லக்குமியே போற்றி
57. ஓம் அறம்பொருள் தருவாய் போற்றி
58. ஓம் ஆதி லட்சுமியே போற்றி
59. ஓம் ஆணவம் அறுப்பாய் போற்றி
60. ஓம் கஜலட்சுமியே போற்றி
61. ஓம் கள்ளமும் கரைப்பாய் போற்றி
62. ஓம் தைரியலட்சுமியே போற்றி
63. ஓம் தயக்கமும் தவிர்ப்பாய் போற்றி
64. ஓம் தனலட்சுமியே போற்றி
65. ஓம் தன தானியம் தருவாய் போற்றி
66. ஓம் விஜய லட்சுமியே போற்றி
67. ஓம் வெற்றியைத் தருவாய் போற்றி
68. ஓம் வரலட்சுமியே போற்றி
69. ஓம் வரமெலாம் தருவாய் போற்றி
70. ஓம் முத்துலட்சுமியே போற்றி
71. ஓம் முத்தியை அருள்வாய் போற்றி
72. ஓம் பூவேந்தர் தொழுவாய் போற்றி
73. ஓம் முத்தமிழ் தருவாய் போற்றி
74. ஓம் கண்ணே எம் கருத்தே போற்றி
75. ஓம் கவலையை ஒழிப்பாய் போற்றி
76. ஓம் விண்ணே எம் விதியே போற்றி
77. ஓம் விவேகம் தந்தருள்வாய் போற்றி
78. ஓம் பொன்னேநன் மணியே போற்றி
79. ஓம் போகம் தந்ருள்வாய் போற்றி
80. ஓம் பூதேவி தாயே போற்றி
81. ஓம் புகழெலாம் தருவாய் போற்றி
82. ஓம் சீதேவி தாயே போற்றி

83. ஓம் சிறப்பெலாம் அருள்வாய் போற்றி
84. ஓம் மதிவதனவல்லி போற்றி
85. ஓம் மாண்பெலாம் தருவாய் போற்றி
86. ஓம் நித்திய கல்யாணி போற்றி
87. ஓம் நீதிநெறி அருள்வாய் போற்ற
88. ஓம் கமலக் கன்னி போற்றி
89. ஓம் கருத்தினிலமர்வாய் போற்றி89
90. ஓம் தவநிலை அருள்வாய் போற்றி
91. ஓம் கலைஞானச் செல்வி போற்றி
92. ஓம் கலஞருக்கருள்வாய் போற்றி
93. ஓம் அருள் ஞானச் செல்வி போற்றி
94. ஓம் அறிஞருக்கருள்வாய் போற்றி
95. ஓம் எளியவர்க்கருள்வாய் போற்றி
96. ஓம் ஏழ்மையைப் போக்குவாய் போற்றி
97. ஓம் வறியவர்க்கருள்வாய் போற்றி
98. ஓம் வறுமையை ஒழிப்பாய் போற்றி
99. ஓம் வேதவல்லியே போற்றி
100. ஓம் வேட்கையைத் தணிப்பாய் போற்றி
101. ஓம் பிறர்பொருள் கவரஎண்ணாப் பெரியர்க்கருள்வாய் போற்றி
102. ஓம் நடிநிலை நீங்கிடாத நல்லவர்க்கருள்வாய் போற்றி
103. ஓம் அறநெறி வழுவிலாத அடியவர்க்கருள்வாய் போற்றி
104. ஓம் அனைத்துமே ஆனாய் போற்றி
105 ஓம் அறிவுனுள் அறிவாம் அன்னையே போற்றி
106 ஓம் நெறியுனுள் நெறியாம் நிலையே போற்றி
107 ஓம் அருள் மிகு இலக்குமி தாயே போற்றி
108. ஓம் மங்கலத் திருநின் மலரடி போற்றி





# சரஸ்வதி துதி

வாழ்க்கைக்கு உதவும் கல்வி மற்றும் கலைகளுக்கு உரிய தெய்வமாக சரஸ்வதி எனும் கலைமகள் போற்றப்படுகிறாள். அந்த சரஸ்வதி தேவியின் முழுமையான அருளைப் பெறுவதற்கான துதி இது.

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கு மென்னம்மை - தூய
உருப் பளிங்கு போல்வாள் என் உள்ளத்தின் உள்ளே
இருப்பள் இங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ்பூந் தாமரை போற் கையுந் - துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தால்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிப்பூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்.

தாவறு முலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் றுணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொ றிருந்திடும் நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம்

நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவு ரைகள்
தேடிக் கொழிக்குங் கவிவாணர் நாவும் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்து நடம்
ஆடிக் களிக்கும் மயிலே! உன்பாதம் அடைக் கலமே!

புத்தகத் துள்ளுறை மாதே
    பூவி லமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்
    வேதப் பொருளுக்கு இறைவீ
முத்தின் குடையுடை யாளே
    மூவுல குந்தொழு தேத்துங்
செப்புக் கவித்த முலையாய்
    செவ்வரி யோடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய்
    சரஸ்வதி யெனுந் திருவே
எக்காலமும் உனைத் தொழுவேன்
    இயல் இசை நாடகமென்னும்
முத்தமிழ்க் கல்விக ளெல்லாம்
    முழுதும் எனக்கருள் செய்து என்
சித்தந்தனில் நீ யிருந்து
    திருவருள் செய்திடுவாயே.

# சரஸ்வதி 108 போற்றி

சரஸ்வதி பூஜையன்று மட்டுமல்ல! தினமும் குறிப்பாக மாணவர்கள் சொல்ல வேண்டிய போற்றி இது. அறிவுக்கு அதிபதி சரஸ்வதி. படிப்பு மட்டுமல்லாமல் ஆடல், பாடல் போன்ற கலைகளையும் திறம்பட கற்க அன்னை சரஸ்வதியின் அருள் தேவை. சரஸ்வதிக்குரிய இந்த போற்றியைச் சொல்லி அன்னையின் அருளைப் பெறுவோமாக.

1. ஓம் அறிவின் வடிவே போற்றி
2. ஓம் அறியாமை நீக்குவாய் போற்றி
3. ஓம் அபயம் அளிப்பாய் போற்றி
4. ஓம் அனுபூதி அருள்வாய் போற்றி
5. ஓம் அட்சமாலை கரத்தாய் போற்றி
6. ஓம் அறிவின் தலைவியே போற்றி
7. ஓம் அழகில் அன்னமே போற்றி
8. ஓம் அளவிலா புகழினாய் போற்றி
9. ஓம் அன்ன வாகினியே போற்றி
10. ஓம் அகிலம் காப்பாய் போற்றி

11. ஓம் ஆசான் வடிவே போற்றி
12. ஓம் ஆனந்த ரூபினியே போற்றி
13. ஓம் ஆதார சக்தியே போற்றி
14. ஓம் ஆயகலை அருள்வாய் போற்றி
15. ஓம் இகபர சுகம் தருவாய் போற்றி
16. ஓம் இசை வடிவானாய் போற்றி
17. ஓம் இளமான் சாயலாய் போற்றி
18. ஓம் இன்னிசை குயிலே போற்றி
19. ஓம் ஈகை குணத்தாளே போற்றி
20. ஓம் ஈடிணை இலாளே போற்றி
21. ஓம் ஈடேற்றுபவளே போற்றி
22. ஓம் உண்மைப் பொருளே போற்றி
23. ஓம் உலகம் உய்விப்பாய் போற்றி
24. ஓம் எண் எழுத்து ஆனாய் போற்றி
25. ஓம் எழிலே உருவானாய் போற்றி
26. ஓம் ஏடு ஏந்தியவளே போற்றி
27. ஓம் ஏகாந்த ரூபிணியே போற்றி
28. ஓம் கல்விக்கு வித்தே போற்றி
29. ஓம் கலைமகள் தாயே போற்றி
30. ஓம் கலை களஞ்சியமே போற்றி
31. ஓம் கற்றோர்க்கு இனியாய் போற்றி
32. ஓம் கரை சேர்ப்பவளே போற்றி
33. ஓம் கலைவாணி தாயே போற்றி
34. ஓம் கலைக்கு அரசியே போற்றி
35. ஓம் கம்பரைக் காத்தாய் போற்றி
36. ஓம் காட்சிக்கு எளியாய் போற்றி
37. ஓம் காயத்ரியானவளே போற்றி
38. ஓம் குருவின் வடிவே போற்றி
39. ஓம் குறை பொறுப்பாய் போற்றி
40. ஓம் குணக் குன்று ஆனாய் போற்றி
41. ஓம் குணம் கடந்தவளே போற்றி
42. ஓம் குருபரர் நாவில் உறைவாய் போற்றி
43. ஓம் கூத்தருக்கு அருளினாய் போற்றி
44. ஓம் கூத்தனுூர் வாழ்பவளே போற்றி
45. ஓம் சகலகலா வல்லியே போற்றி
46. ஓம் சரஸ்வதி தாயே போற்றி

47. ஓம் சதுர்முகன் நாயகியே போற்றி
48. ஓம் சந்தேகம் தீர்ப்பாய் போற்றி
49. ஓம் சங்கடம் தவிர்ப்பாய் போற்றி
50. ஓம் சச்சிதானந்த ரூபமே போற்றி
51. ஓம் சாரதாம்பிகையே போற்றி
52. ஓம் சாந்த சொரூபினியே போற்றி
53. ஓம் சான்றோர் வடிவே போற்றி
54. ஓம் சித்தம் தெளிவிப்பாய் போற்றி
55. ஓம் சித்தி அளிப்பாய் போற்றி
56. ஓம் சுருதி மறை பொருளே போற்றி
57. ஓம் ஞான வித்யாம்பிகையே போற்றி
58. ஓம் ஞானேஸ்வரித் தாயே போற்றி
59. ஓம் ஞாலம் வாழ்விப்பாய் போற்றி
60. ஓம் ஞான சக்தி வடிவே போற்றி
61. ஓம் ஞானாசிரியை ஆனாய் போற்றி
62. ஓம் தவக்கோலத் தாயே போற்றி
63. ஓம் தஞ்சம் அளிப்பாய் போற்றி
64. ஓம் தயை மிக்கவளே போற்றி
65. ஓம் தயாநிதி தருபவளே போற்றி
66. ஓம் துூய மனத்தினாய் போற்றி
67. ஓம் நவமி தேவதையே போற்றி
68. ஓம் நன்னெறி நாயகியே போற்றி
69. ஓம் நலம் அருள்பவளே போற்றி
70. ஓம் நாவின் அரசியே போற்றி
71. ஓம் நான்மறை வித்தகியே போற்றி
72. ஓம் நாத வெள்ளமே போற்றி
73. ஓம் நாதாந்த வடிவே போற்றி
74. ஓம் நிறைவாழ்வு தருவாய் போற்றி
75. ஓம் நுட்பம் மிக்கவளே போற்றி
76. ஓம் பக்தர் தம் திலகமே போற்றி
77. ஓம் பண்ணின் வடிவாய் போற்றி
78. ஓம் பளிங்கு மனத்தினாய் போற்றி
79. ஓம் படிக நிறத்தினாய் போற்றி
80. ஓம் பாட்டின் இனிமையே போற்றி
81. ஓம் பாட்டின் பொருளே போற்றி
82. ஓம் பிரணவப் பொருளே போற்றி

83. ஓம் பிரம்ம ஞானியே போற்றி
84. ஓம் பிரம்மன் துணைவியே போற்றி
85. ஓம் புலமை மிக்கவளே போற்றி
86. ஓம் பூரண வடிவினளே போற்றி
87. ஓம் புவனம் காப்பவளே போற்றி
88. ஓம் புனிதம் மிக்கவளே போற்றி
89. ஓம் வாக்கில் இருப்பவளே போற்றி
90. ஓம் வாக்கு தேவதையே போற்றி
91. ஓம் வித்யாம்பிகையே போற்றி
92. ஓம் வித்தக ரத்தினமே போற்றி
93. ஓம் மந்திர வடிவினாய் போற்றி
94. ஓம் மயக்கம் தீர்ப்பாய் போற்றி
95. ஓம் முக்காலம் அறிந்தாய் போற்றி
96. ஓம் முக்தி அருள்பவளே போற்றி
97. ஓம் மூல நட்சத்திரத்தாளே போற்றி
98. ஓம் மேதா ரத்தினமே போற்றி
99. ஓம் மேன்மை மிக்காய் போற்றி
100. ஓம் வழித்துணை வருவாய் போற்றி
101. ஓம் வரம் பல தருவாய் போற்றி
102. ஓம் வீணை தாங்கியவளே போற்றி
103. ஓம் வெண்தாமரை உறைவாய் போற்றி
104. ஓம் வெள்ளாடை உடுத்தாய் போற்றி
105. ஓம் வித்தகம் அளிப்பாய் போற்றி
106. ஓம் வேதாந்த நாயகியே போற்றி
107. ஓம் வேத வடிவானவளே போற்றி
108. ஓம் கலைகளின் அதிபதியே போற்றி





# மஹிஷாசுரமர்த்தினி ஸ்தோத்திரம்

ஸ்ரீ துர்க்காதேவி, சண்டிகை ரூபமெடுத்து மஹிஷன் எனும் அசுரனை வதம் செய்ததைப் பாடும் இந்த ஸ்தோத்திரம் ஸ்ரீ தேவி மஹாத்மியத்தின் பகுதியாகும். இந்த ஸ்தோத்திரமானது இராமகிருஷ்ணகவி அவர்களுக்கு சமர்ப்பணமாக, ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியாரால் இயற்றப்பட்டதாக கருதப்படுகிறது.

1. அயிகிரி நந்தினி நந்தித மேதினி விச்வ வினோதினி நந்தநுதே
கிரிவர விந்த்ய சிரோதி நிவாஸினி விஷ்ணு விலாஸினி ஜிஷ்ணுநுதே
பகவதி ஹே சிதிகண்ட குடும்பினி பூரிகுடும்பினி பூரிக்ருதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்திநி ரம்ய கபர்தினி சைலஸுதே

2. ஸுரவர வர்ஷிணி துர்தர தர்ஷிணி துர்முக மர்ஷிணி ஹர்ஷரதே
த்ரிபுவன போஷிணி சங்கர தோஷிணி கில்பிஷ மோஷிணி கோஷரதே
தனுஜ நிரோஷிணி திதிஸுத ரோஷிணி துர்மத சோஷிணி ஸிந்துஸுதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்திநி ரம்ய கபர்தினி சைலஸுதே

3. அயி ஜகதம்ப மதம்ப கதம்பவன ப்ரிய வாஸினி ஹாஸரதே
சிகரி சிரோமணி துங்க ஹிமாலய ச்ருங்க நிஜாலய மத்யகதே
மதுமதுரே மதுகைடப கஞ்ஜினி கைடப பஞ்ஜினி ராஸரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்திநி ரம்ய கபர்தினி சைலஸுதே

4. அயி சதகண்ட விகண்டித ருண்ட விதுண்டித சுண்ட கஜாதிபதே
ரிபுகஜ கண்ட விதாரண சண்ட பராக்ரம சுண்ட ம்ருகாதிபதே
நிஜபுஜ தண்ட நிபாதித கண்ட விபாதித முண்ட பதாதிபதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்திநி ரம்ய கபர்தினி சைலஸுதே-

5. அயிரண துர்மத சத்ரு வதோதித துர்தர நிர்ஜர சக்தி ப்ருதே
சதுர விசார துரீண மஹாசிவ தூதக்ருத ப்ரமதாதிபதே
துரித துரீஹ துராசய துர்மதி தானவ தூத க்ருதாந்தமதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

6. அயி சரணாகத வைரிவ தூவர வீர வராபய தாயகரே
த்ரிபுவன மஸ்தக சூலவிரோதி சிரோதி க்ருதாமல சூலகரே
துமிதுமி தாமர துந்துபி நாத மஹோ முகரீக்ருத திங்மகரே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

7. அயி நிஜஹுங்க்ருதி மாத்ர நிராக்ருத தூம்ர விலோசன தூம்ரசதே
ஸமரவிசோஷித சோணிதபீஜ ஸமுத்பவ சோணித பீஜலதே
சிவசிவ சும்ப நிசும்ப மஹாஹவ தர்ப்பித பூத பிசாசரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

8. தனுரனு ஸங்க ரணக்ஷண ஸங்க பரிஸ்ஃபுர தங்க நடத்கடகே
கனக பிசங்க ப்ரிஷத்க நிஷங்க ரஸத்பட ச்ருங்க ஹதாபடுகே
க்ருத சதுரங்க பலக்ஷிதிரங்க கடத்பஹுரங்க ரடத்படுகே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

9. ஜய ஜய ஜப்ய ஜயே ஜய சப்த பரஸ்துதி தத்பர விச்வ நுதே
ஜணஜண ஜிஞ்ஜிமி ஜிங்க்ருத நூபுர ஸிஞ்ஜித மோஹித பூதபதே
நடித நடார்த்த நடீ நட நாயக நாடித நாட்ய ஸுகான ரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

10. அயி ஸுமன: ஸுமன: ஸுமன: ஸுமன: ஸுமனோஹர காந்தியுதே
ச்ரித ரஜனீ ரஜனீ ரஜனீ ரஜனீ ரஜனீகர வக்த்ர வ்ருதே
ஸுநயன விப்ரமர ப்ரமர ப்ரமர ப்ரமர ப்ரமரா திபதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

11. ஸஹித மஹாஹவ மல்ல மதல்லிக மல்லி தரல்லக மல்லரதே
விரசித வல்லிக பல்லி கமல்லிக ஜில்லிக பில்லிக வர்கவ்ருதே
சிதக்ருத ஃபுல்லஸ முல்லஸி தாருண தல்லஜ பல்லவ ஸல்லலிதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

12. அவிரலகண்ட கலன்மத மேதுர மத்த மதங்கஜ ராஜபதே
த்ரிபுவன பூஷண பூதகலாநிதி ரூப பயோநிதி ராஜஸுதே
அயிஸுத தீஜன லாலஸ மானஸ மோஹன மன்மத ராஜஸுதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

13. கமல தலாமல கோமல காந்தி கலா கலிதாமல பாலலதே
ஸகல விலாஸ கலாநிலய க்ரம கேலிசலத்கல ஹம்சகுலே
அலிகுல சங்குல குவலய மண்டல மௌலிமிலத் பகுலாலிகுலே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

14. கர முரலீரவ வீஜித கூஜித லஜ்ஜித கோகில மஞ்ஜுமதே
மிலித புலிண்ட மனோஹர குஞ்ஜித ரஞ்சித சைல நிகுஞ்ஜகதே
நிஜகுணபூத மஹா சபரீகண ஸத்குண ஸம்ப்ருத கேலிதலே
ஜய ஜய ஹே மஹிஷாசுர மர்தினி ரம்யக பர்தினி சைலஸுதே

15. கடிதடபீத துகூல விசித்ர மயூக திரஸ்க்ருத சந்த்ரருசே
ப்ரணத ஸுராஸுர மௌலி மணிஸ்ஃபுர தன்சுல ஸன்னக சந்த்ரருசே
ஜிதகனகாசல மௌலி பதோர்ஜித நிர்பர குஞ்ஜர கும்பகுசே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

16. விஜித ஸஹஸ்ர கரைக ஸஹஸ்ர கரைக ஸஹஸ்ர கரைகநுதே
க்ருத ஸுர தாரக ஸங்கர தாரக ஸங்கர தாரக ஸூனுஸுதே
ஸுரத சமாதி ஸமான ஸமாதி ஸமாதி ஸமாதி ஸுஜாதரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

17. பதகமலம் கருணா நிலயே வரிவஸ்யதியோ ஸ்னுதினம் ஸுசிவே
அயி கமலே கமலா நிலயே கமலா நிலய ஸகதம் நபவேத்
தவ பதமேவ பரம்பதமித் யனு சீலயதோ மமகிம் ந சிவே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

18. கனகல ஸத்கல ஸிந்துஜலைரனு ஸிஞ்சிநுதே குண ரங்கபுவம்
பஜதி ஸகிம் நசசீ குசகும்ப தடீ பரிரம்ப ஸுகானுபவம்
தவ சரணம் சரணம் கரவாணி நதாமரவாணி நிவாஸிசிவம்
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

19. தவ விமலேந்து குலம் வதனேந்துமலம் ஸகலம் நனு கூலயதே
கிமு புரஹூத புரீந்துமுகீ ஸுமுகீபிரஸௌ விமுகீ க்ரியதே
மமது மதம் சிவநாமதனே பவதீ க்ருபயா கிமுத க்ரியதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

20. அயி மயி தீனதயாலு தயா க்ருபயைவ த்வயா பவித்வயமுமே
அயி ஜகதோ ஜனனீ க்ருபயாஸி யதாஸி ததாஸனு மிதாஸிரதே
யதுசித மத்ர பவத்யுரரீ குருதா துருதா பமபாகுருதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே



## திருவிளக்கு 108 போற்றி

தீபம் ஏற்றும்போது இருளைப் போக்கி வெளிச்சத்தை தருகிறது. எனவே தீபம் அல்லது விளக்கு ஏற்றி வழிபாடு செய்வது எமது மதத்தில் ஒரு முக்கியத்துவம் வாய்த செயலாக கருதப்படுகிறது. அப்படிப்பட்ட ஒரு பூஜைதான் "திருவிளக்குப் பூஜை". இப்பூஜை பெண்களால் மட்டுமே செய்யப்படுகிறது. வீட்டிலோ அல்லது ஆலயத்திலோ திருவிளக்கு பூஜை செய்யப்படும்போது கூறவேண்டிய மந்திரம் இது. இதைக் கூறுவதன் மூலம் நாம் நினைத்த காரியங்கள் அனைத்தும் நிறைவேறும்.

1. பொன்னும் மெய்ப் பொருளும் தருவாய் போற்றி
2. போகமும் திருவும் புணர்ப்பாய் போற்றி
3. முற்றறிவு ஒளியாய் மிளிர்ந்தாய் போற்றி
4. மூவுலகும் நிறைந்திருந்தாய் போற்றி
5. வரம்பில் இன்பமாய் வளர்ந்திருந்தாய் போற்றி!
6. இயற்கையாய் அறிவொளி ஆனாய் போற்றி
7. ஈரேழுலகம் ஈன்றாய் போற்றி

8. பிறர் வயமாகா பெரியோய் போற்றி
9. பேரின்பப் பெருக்காய் பொலிந்தாய் போற்றி
10. பேரருட் கடலாம் பொருளே போற்றி!
11. முடிவில் ஆற்றல் உடையாய் போற்றி
12. மூவுலகுந்தொழ மூத்தோய் போற்றி
13. அளவிலாச் செல்வம் தருவாய் போற்றி
14. ஆனந்த அறிவொளி விளக்கே போற்றி
15. ஓம் எனும் பொருளாய் உள்ளோய் போற்றி!
16. இருள் கெடுத்து இன்பருள் எந்தாய் போற்றி
17. மங்கல நாயகி மாமணி போற்றி
18. வளமை நல்கும் வல்லியே போற்றி
19. அறம் வளர்நாயகி அம்மையே போற்றி
20. மின் ஒளியம்மையாம் விளக்கே போற்றி!
21. மின் ஒளிப் பிழம்பாய் வளர்ந்தாய் போற்றி
22. தையல் நாயகித் தாயே போற்றி
23. தொண்டர் அகத்தமர் தூமணி போற்றி
24. முக்கட் சுடரின் முதல்வி போற்றி
25. ஒளிக்குள் ஒளியாய் உயர்வாய் போற்றி!
26. சூடாமணியே சுடர் ஒளி போற்றி
27. இருள் ஒழித்து இன்பம் ஈவோய் போற்றி
28. அருள் பொழிந்து எம்மை ஆள்வாய் போற்றி
29. அறிவினுக்கு அறிவாய் ஆனாய் போற்றி
30. இல்லற விளக்காம் இறைவி போற்றி!
31. சுடரே விளக்காம் தூயாய் போற்றி
32. இடரைக் களையும் இயல்பினாய் போற்றி
33. எரி சுடராய் நின்ற இறைவி போற்றி
34. ஞானச் சுடராய் நின்றாய் போற்றி
35. அருமறைப் பொருளாம் ஆதிபோற்றி!
36. தூண்டு சுடர் இனிய சோதி போற்றி சோதியே போற்றி
37. சுடரே போற்றி ஓதும் உள் ஒளி விளக்கே போற்றி
38. இருள் கெடுக்கும் இல்லத்து விளக்கே போற்றி
39. சொல்லக் விளக்காம் சோதியே போற்றி!
40. பலர்காண் பல்கலை விளக்கே போற்றி
41. நல்லக நமச்சிவாய விளக்கே போற்றி
42. உவப்பிலா ஒளிவளர் விளக்கே போற்றி
43. உணர்வுசூழ் கடந்ததோர் விளக்கே போற்றி

44. உடம்பெனும் மனையக விளக்கே போற்றி!
45. உள்ளத் தகளி விளக்கே போற்றி
46. மடம்படும் உணர் நெய் விளக்கே போற்றி
47. உயிரெனும் திரிமயக்கு விளக்கே போற்றி
48. இடம்படும் ஞானத்தீ விளக்கே போற்றி
49. நோக்கு வார்க்கு எரிகோள் விளக்கே போற்றி
50. ஆதியாய் நடுவுமாகும் விளக்கே போற்றி
51. அளவிலா அளவுமாகும் விளக்கே போற்றி
52. சோதியாய் உணர்வுமாகும் விளக்கே போற்றி
53. தில்லைப் பொதுநட விளக்கே போற்றி
54. கற்பனை கடந்த சோதியே போற்றி!
55. கருணையே உருவாம் விளக்கே போற்றி
56. அற்புதக் கோல விளக்கே போற்றி
57. அருமறைச் சிரத்து விளக்கே போற்றி
58. சிற்பர வியோம விளக்கே போற்றி
59. பொற்புடன் நடஞ்செய் விளக்கே போற்றி!
60. உள்ளத் திருளை ஒழிப்பாய் போற்றி
61. கள்ளப் புலனை கரைப்பாய் போற்றி
62. உருகுவோர் உள்ளத்து ஒளியே போற்றி
63. பெருகு அருள் சுரக்கும் பெரும் பொருள் போற்றி
64. இருள் சேர் இருவினை எறிவாய் போற்றி!
65. அருவே உருவே அருவுரு போற்றி
66. நந்தா விளக்கே நாயகியே போற்றி
67. செந்தாமரைத்தாள் தந்தாய் போற்றி
68. தீபமங்கல ஜோதி விளக்கே போற்றி
69. மதிப்பவர் மனமணிவிளக்கே போற்றி!
70. பாகம் பிரியா பராபரை போற்றி
71. ஆகம முடிமேல் அமர்ந்தாய் போற்றி
72. ஏகமும் நடஞ்செய் எம்மான் போற்றி
73. ஊழி ஊழி உள்ளோய் போற்றி
74. ஆழியான் காணா அடியோய் போற்றி!
75. ஆதியும் அந்தமும் அற்றாய் போற்றி
76. அந்தமிலா இன்பம் அருள்வாய் போற்றி
77. முந்தைய வினையை முடிப்போய் போற்றி
78. பொங்கும் கீர்த்தி பூரணி போற்றி
79. தண்ணருள் சுரக்கும் தாயே போற்றி!
80. அருளே உருவாய் அமைந்தோய் போற்றி

81. இருநில மக்கள் இறைவி போற்றி
82. குருவென ஞானம் கொடுப்பாய் போற்றி
83. ஆறுதல் எமக்கிங் களிப்பாய் போற்றி
84. தீதெல்லாம் தீர்க்கும் திருவே போற்றி!
85. பக்தியில் ஆழ்ந்த பரமே போற்றி
86. எத்திக்குந் துதிஎய்தாய் போற்றி
87. அஞ்சேலென்றருளும் அன்பே போற்றி
88. தஞ்சமென்றவரைச் சார்வோய் போற்றி
89. ஓதுவார் அகத்துறை ஒளியே போற்றி!
90. ஓங்காரத்து உள்ளொளி விளக்கே போற்றி
91. எல்லா உலகமும் ஆனாய் போற்றி
92. பொல்லா வினைகள் அறுப்பாய் போற்றி
93. புகழ்ச் சேவடி என்மேல் வைத்தாய் போற்றி
94. செல்வாக்கு செல்வம் தருவாய் போற்றி!
95. பூங்கழல் விளக்கே போற்றி போற்றி
96. உலகம் உவப்புற வாழ்வருள் போற்றி
97. உயிர்களின் பசிப்பிணி ஒழித்தருள் போற்றி
98. செல்வம் கல்வி சிறப்பருள் போற்றி
99. நல்லன்பு ஒழுக்கம் நல்குவாய் போற்றி!
100. விளக்கிட்டார்க்கு மெய்ந்நெறி விளக்குவாய்
101. போற்றி நலம் எல்லா உயிர்க்கும் நல்குக போற்றி
102. தாயே நின்னருள் தந்தாய் போற்றி
103. தூய நின் திருவடி தொழுதனம் போற்றி போற்றி
104. என்பார் அமரர் விளக்கே போற்றி! போற்றி
105. என்பார் மனிதர் விளக்கே போற்றி போற்றி
106. என் அன்பொளி விளக்கே போற்றி போற்றி! போற்றி!
107. அறிவொளி விளக்கே போற்றி
108. திருவிளக்கே போற்றி





# ஸ்ரீ லலிதா நவரத்தின மாலை

அகத்திய முனிவர் அருளியது. பொருளாதார நெருக்கடிகள் அனைத்தும் விலகி இல்லத்தில் சர்வ மங்களம் பெரிகிடவும், பொன், பொருள் உள்ளிட்ட ஆபரணங்கள் சேரவும் தினமும் பாடுவதற்காக எழிய தமிழில் தரப்பட்டுள்ளது.

ஞான கணேசா சரணம் சரணம்
ஞான ஸ்கந்தா சரணம் சரணம்
ஞான ஸத்குரோ சரணம் சரணம்
ஞானா னந்தா சரணம் சரணம்

## காப்பு

ஆக்கும் தொழில் ஐந்தரன் ஆற்றநலம்
பூக்கும் நகையாள் புவனேஸ்வரிபால்
சேர்க்கும் நவரத்தின மாலையினைக்
காக்கும் கணநாயக வாரணமே.

மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

## 1. வைரம்

கற்றும் தெளியார் காடே கதியாய்க்
கண்மூடி நெடுங்கன வான தவம்
பெற்றும் தெளியார் நிலையென்னில் அவள்
பெருகும் பிழையேன் பேசத் தகுமோ

பற்றும் வயிரப் படைவாள் வயிரப்
பகைவர்க்கு எமனாக எடுத்தவளே
வற்றாத அருள்சுனையே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே!

## 2. நீலம்

மூலக்கனலே சரணம் சரணம்
முடியா முதலே சரணம் சரணம்
கோலக்கிளியே சரணம் சரணம்
குன்றாத ஒளிக்குவையே சரணம்
நீலத் திருமேனியிலே நினைவாய்
நினைவற்றெளியேன் நின்றேன் அருள்வாய்
வாலைக் குமரீ வருவாய் வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே!

## 3. முத்து

முத்தேவரும் முத்தொழிலாற்றிடவே
முன்னின் றருளும் முதல்வி சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம்
வேதாந்த நிவாசினியே சரணம்
தத்தேறிய நான் தனயன் தாய் நீ
சாகாத வரம் தரவே வருவாய்
மத்தேறு ததிக்கிணை வாழ்வடையேன்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே!

## 4. பவளம்

அந்தி மயங்கிய வானவி தானம்
அன்னை நடம் செய்யும் ஆனந்த மேடை
சிந்தை நிறம் பவளம் பொழிபாரோ
தேன்பொழிலாமீது செய்தவள் யாரோ
எந்தயிடத்தும் மனத்தும் இருப்பாள்
எண்ணுபவர்க்குள் எண்ணமிகுந்தாள்
மந்திரவேத மயப் பொருளானாள்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே!

## 5. மாணிக்கம்

காணக் கிடையாக் கதியானவளே
கருதக் கிடையாக் கலையானவளே
பூணக் கிடையாப் பொலிவானவளே
புனையக் கிடையாப் புதுமைத்தவளே
நாணித் திருநாமமும் நின்துதியும்
நவிலாதவரை நாடாதவளே
மாணிக்க ஒளிக்கதிரே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே!

## 6. மரகதம்

மரகத வடிவே சரணம் சரணம்
மதுரிதபதமே சரணம் சரணம்
சுரபதி பணியத் திகழ்வாய் சரணம்
சுதிஜதி லயமே இசையே சரணம்
அர ஹர சிவ என்றடியவர் குழும
அவரருள் பெற அருளமுதே சரணம்
வர நவநிதியே சரணம் சரணம்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே!

## 7. கோமேதகம்

பூமேவிய நான் புரியும் செயல்கள்
பொன்றாது பயன் குன்றா வரமும்
தீ மேல் இடினும் ஜெயசக்தி எனத்
திடமாய் அடியேன் மொழியும் திறமும்
கோமேதகமே குளிர்வான் நிலவே
குழல் வாய் மொழியே வருவாய் தருவாய்
மாமேருவிலே வளர் கோகிலமே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே!

## 8. புஷ்பராகம்

ரஞ்சனி நந்தினி அங்கணி பதும
ராக விகாஸ வியாபினி அம்பா
சஞ்சல ரோக நிவாரணி வாணீ
சாம்பவி சந்த்ர கலாதரி ராணி
அஞ்சல மேனி அலங்க்ருத பூரணி

அம்ருத ஸொரூபிணி நித்ய கல்யாணி
மஞ்சுள மேரு சிருங்க நிவாஸினி
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே!

## 9. வைடூர்யம்

வலையொத்த வினை கலையொத்த மனம்
மருளப் பறையாறொலி ஒத்த விதால்
நிலையற்று எளியேன் முடியத் தகுமோ
நிகளம் துகளாக வரம் தருவாய்
அளவற்று அசைவற்று அநுபூதி பெறும்
அடியார் முடிவாழ் வைடூர்யமே
மலையத் துவசன் மகளே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே!

## பயன்

எவர் எத்தினமும் இசையாய் லலிதா
நவரத்தின மாலை நவின்றிடுவார்
அவர் அற்புத சக்தி எல்லாம் அடைவார்
சிவரத்தினமாய் திகழ்வார் அவரே.



# துக்க நிவாரண அஷ்டகம்

துக்க நிவாரண அஷ்டகம் என்பது எமது கவலைகள் நீங்க காமாட்சி அம்மனை நினைத்துப் பாடும் எட்டுப் பாடல்களின் தொகுப்பாகும். மனதை வருடும் "துக்க நிவாரண அஷ்டகம்" காலையில் ஒரு முறை படிக்கும் அல்லது கேட்கும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் மனதுக்கு வல்லமை தந்து உங்கள் கவலைகளை நீக்கும்.

மங்கள ரூபினி மதியணி சூலினி
மன்மத பாணியளே
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும்
சங்கரி சௌந்தரியே
கங்கண பாணியள் கனிமுகங் கண்டநல்
கற்பகக் காமினியே
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்கநிவாரணி காமாட்சி

கானுரு மலரெனக் கதிர் ஒளி காட்டிக்
காத்திட வந்திடுவாய்
தானுற தவஒளி தாரொளி மதியொளி
தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியாள் மாதவர் மொழியாள்
மாலைகள் சூடிடுவாள்
ஜயஜெய சங்கரிகௌரி க்ருபாகரி
துக்கநிவாரணி காமாட்சி

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிட
சபையினில் வந்தவளே
பொங்காp மாவினில் பொன்னடி வைத்துப்
பொருந்திடவந்தவளே
எம்குலந்தழைத்திட எழில் வடிவுடனே
எழுந்தநற் துர்க்கையளே
ஜயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்கநிவாரணி காமாட்சி

தண தண தந்தண தவிலொலி முழங்கிடத்
தண்மணிநீ வருவாய்
கணகண கங்கண கதிர் ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய்
பணபண பம்பண பறையொலி கூவிட
பண்மணி நீ வருவாய்
ஜெயஜெய சங்கரிகௌரி க்ருபாகரி
துக்கநிவாரணி காமாட்சி

பஞ்சமி வைரவி பர்வத புத்திரி
பஞ்சநல் பாணியளே
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேலனைக்
கொடுத்த நல்குமாரியனே
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்த நற்
சக்தியெனும் மாயே
ஜெயஜெய சங்கரிகௌரி க்ருபாகரி
துக்கநிவாரணி காமாட்சி

எண்ணிய படி நீயருளிட வருவாய்
எம்குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப்
பல்கிட அருள்வாய்
கண்ணொளியதனால் கருனையே காட்டிக்
கவலைகள் தீர்ப்பவளே
ஜெயஜெய சங்காரி கௌரி க்ருபாகரி
துக்கநிவாரணி காமாட்சி

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை
யென்று நீ சொல்லிடுவாய்
சுடர்தரும் அமுதே சுருதிகள் கூறிச்
சுகமது தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து
பழவினை ஓட்டிடுவாய்
ஜெயஜெய சங்கரிகௌரி க்ருபாகரி
துக்கநிவாரணி காமாட்சி

ஜெயஜெய பாலா சாமுண்டேஸ்வரி
ஜெயஜெய ஸ்ரீ தேவி
ஜெயஜெய துர்க்கா ஸ்ரீ பரமேஸ்வரி
ஜெயஜெய ஸ்ரீ தேவி
ஜெயஜெய ஜெயந்தி மங்கள காளி
ஜெயஜெய ஸ்ரீ தேவி
ஜெயஜெய சங்கரிகௌரி க்ருபாகரி
துக்கநிவாரணி காமாட்சி



## குங்குமக் கவசம்

பெண்கள் நெற்றியில் குங்குமம் இடுவதனால் ஸ்ரீ மஹா இலட்சுமியின் நீங்காத அருளைப் பெறுவார்கள் என்பது நம்பிக்கை. வெள்ளிகிழமை மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் குங்கும கவசத்தைப் பாராயணம் செய்து அன்னை காமாட்சியை மனதில் இருத்தி குங்குமம் இட்டுக்கொள்ள சர்வ மங்கலமும் பெருகும்.

குங்குமமாவது குறைகளைத் தீர்ப்பது
குங்குமமாவது குடியினைக் காப்பது
குங்குமமாவது குணமதளிப்பது
குங்குமாவது கொல்வினை தீர்ப்பது.

விதி வினை வெல்வது விமலையின் குங்குமம்
நிதிதனை ஈவது நிமலையின் குங்குமம்
பதிதனைக் காப்பது பதிவிரதை குங்குமம்
கதிதனை ஆள்வதும் கருத்தான குங்குமம்

தஞ்சமென்றோரை தடுத்தாண்டு கொள்வதும்
பஞ்ச மாபாதகம் பரிந்துமே தீர்ப்பதும்
அஞ்சின பேர்க்கு அபயமளீப்பதும்
காஞ்சி காமாக்ஷி கருணைக் குங்குமம்

நற்பத மீவது நாரணி குங்குமம்
பொற்பினை ஈவது பூரணி குங்குமம்
சிற்பரமாவது சிவகாமி குங்குமம்
கற்பினைக் காப்பதும் காரிகைகுக் குங்குமம்

செஞ்சுடர் போல்வது சீரான குங்குமம்
கொஞ்சு மழகைக் கொடுப்பது குங்குமம்
ஐந்து புலங்கள் அடக்கி அருள்வதும்
காசி விசாலாட்சி கனிவாம் குங்குமம்

நோயினைத் தீர்ப்பதும் நுண்ணறி யீவதும்
பேயினைத் தீர்ப்பதும் பெரும் புகழீவதும்
சேயினைக் காப்பதும் செல்வம் தருவதும்
தாயினை அர்ச்சித்த தன்னொளிக் குங்குமம்

சக்தி கொடுப்பதும் சத்தியம் காப்பதும்
பக்தி யளிப்பதும் பரகதி யீவதும்
முக்தி கொடுப்பதும் மும்மலம் தீர்ப்பதும்
சித்தி தருவதும் சிறந்த குங்குமம்.

நெஞ்சிற் கவலைகள் நீக்கியருள்வதும்
செஞ்சொற் கவிபாடும் சீரினை யீவதும்
வஞ்ச பகைவரை வாட்டி யருள்வதும்
மதுரை மீனாட்ஷி மங்கலக் குங்குமம்.

சிவசிவ என்று திருநீறணிந்த பின்
சிவகாமியேயென் சிந்தித்தணிவதும்
தவமான மேலோருந்தரித்துக் களீப்பதும்
பவவினை தீர்ப்பதும் பராசக்தி குங்குமம்.

எவையெவை கருதிடில் அவையவையீவதும்
நவவகை சக்தியின் நலனைக் கொடுப்பதும்
குவிசெய் கரத்துடன் கும்பிட்ட பேர்க்கு
குவிநிதி யீவதும் குலநலக் குங்குமம்.

அஷ்டலக்ஷ்மி அருள் தந்தளிப்பதும்
இஷ்டங்களீவதும் ஈடற்ற குங்குமம்
கஷ்டம் தவிர்ப்பதும் காத்தெனை யாள்வதும்
அஷ்ட ஸ்ரீசக்கர ஆனந்தக் குங்குமம்.

குஷ்டம் முதலான மாரோகம் தீர்ப்பதும்
நஷ்டம் வாராதொரு நலனைக் கொடுப்பதும்
எட்டும் இரண்டும் அறிவித்தோர் வீடினை
கிட்டவே செய்வதும் கேண்மைக் குங்குமம்.

பட்ட காலிலே படுமென கஷ்டங்கள்
விட்டிடாமலே வந்துமே வாட்டினும்
பட்டான பார்வதி பாதம் பணீந்தே
இட்டார் இடர் தவிர்க்கும் இனிய குங்குமம்.

சித்தம்தனை சுத்தி செய்வதற் கெளியதோர்
எத்துந் தெரியாத ஏமாந்த மாந்தரே
நித்தம் தொழுதென்னை குங்குமந்தன்னை
நித்தம் தரித்துமே மேன்மை அடைவோம்

மிஞ்சும் அழகுடன் குங்குமம் தன்னை
செஞ்சுடராகுமோர் ஸ்ரீசக்கரம் ஈஸ்வரியின்
கஞ்ச மலர் முகந்தன்னில் திகழ்வதும்
பஞ்ச நிதி தரும் பண்புக் குங்குமம்.

# நவராத்திரி கொலு
## (பின் அட்டைப்படம்)

வீடுகளிலும், பாடசாலைகளிலும் நவராத்திரி காலங்களில் கொலு வைத்தல் விசேட அம்சமாகும். படிப்படியாக அமைக்கப்பட்ட விசேடமான பீடங்களில் தத்தமது இரசனைக்கேற்ப விதம்விதமான பொம்மைகளை வைத்து இக்கொலு அலங்கரிக்கப்படுகிறது.

மனிதன் படிப்படியாக தன் ஆன்மீக சிந்தனைகளை வளர்த்து, இறுதியாக இறைவனுடன் கலக்கவேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்த வேண்டும் என்பதற்காகவே கொலுவில் படிகள் அமைக்கப் பட்டு, அதில் பொம்மைகள் அடுக்கி வைக்கப்படுகின்றன.

கொலுவானது அமாவாசை அன்று வைப்பதுதான் சம்பிரதாயம். ஆனால் அமாவாசையன்று கலசம் வைப்பது என்று திட்டமிட்டுக் கொண்டு மற்றப் பொம்மைகளை ஓரிரு நாட்கள் முன்பாகவே வைக்கலாம்.

ஒன்பது படிகள் அமைப்பது மரபு என்றாலும் 5, 7 அல்லது 9 என்ற ஒற்றைப்படையாகப் படிகளின் எண்ணிக்கையை வைத்து தத்தமது வசதிக்கேற்ப சிறிது பெரிதாக கொலு அமைத்துக் கொள்ளலாம்.

படிகளின் இரு மருங்கிலும் மற்றும் மேற்பரப்பிலும் தூய்மையான வேட்டி அல்லது சேலையையோ விரிக்க வேண்டும். அருகிலே கும்பம் வைத்து சுவாமிப் படங்களையும் மாட்டி அணையா விளக்குகள் ஏற்றி அலங்கரிப்பர். இதற்காக அலங்கார மின் குமிழ்களும் பயன்படுத்துவர். ஒன்பது நாட்களும் விதம்விதமான சிற்றுண்டி நைவேத்தியம் செய்து பூசிப்பது வழக்கத்தில் உள்ளது.

படிகளில் பொம்மைகள் வைப்பதிலும் ஒழுங்குகள் கடைப்பிடிக்கப் படுகிறது. சில குறிப்பிட்ட பொம்மைகள் கிடைக்கப்பெறாதவிடத்து வேறு பொம்மைகளைப் பயன்படுத்துவது வழக்கத்தில் உள்ளது.

முதலாம் படி: ஓரறிவு உயிர்களான புல், செடி, கொடி போன்ற தாவர வர்க்கங்களின் பொம்மைகள்.

இரண்டாம் படி: ஈரறிவு கொண்ட நத்தை, சங்கு போன்ற பொம்மைகள்.

மூன்றாம் படி: மூன்றறிவு உயிர்களான கறையான், எறும்பு போன்ற வற்றின் பொம்மைகள்.

நான்காம் படி: நான்கறிவு உயிர்களாக விளங்கும் நண்டு, வண்டு போன்றவற்றின் பொம்மைகள்.

ஐந்தாம் படி: ஐந்தறிவு உள்ள மிருகங்கள், பறவைகள் ஆகியவற்றின் பொம்மைகள்.

ஆறாம் படி: ஆறறிவு மனிதர்களின் பொம்மைகள்.

ஏழாம் படி: மனித நிலையில் இருந்து உயர் நிலையை அடைந்த சித்தர்கள், ரிஷிகள், மகரிஷிகள் (இரமணர், வள்ளலார்), போன்றோரின் பொம்மைகள்.

எட்டாம் படி: தேவர்கள், அட்டதிக்குப் பாலகர்கள், நவக்கிரக அதிபதிகள் போன்ற தெய்வங்கள், தேவதைகள் போன்றோரின் பொம்மைகள்.

ஒன்பதாம் படி: முதலில் விநாயகர் சிலையை வைத்த பின் நடுநாயகமாக ஆதிசக்தியை வைத்து, பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளை அவரவர்களின் தேவியருடன் வைக்கவேண்டும்.

கொலுப்படி அமைப்பு மனிதப் பிறவியின் பரிணாம வளர்ச்சியையே குறிப்பது என்ற உயரிய உட்பொருள் இப்பொழுது புலனாகிறது.

நவராத்திரி விரத காலங்களில் முக்கிய அம்சம் கொலு வைத்தலே யாகும். இந்தியாவில் நவராத்திரி விழா மிகவும் விசேடமாகவும், உற்சாகத்துடனும் கொண்டாடப்படுகிறது. இங்கு கொலு அலங்காரங் கள் கண்ணுக்கு விருந்தாக இருக்கும். ஈழத்தில் மிக அரிதாகவே கொலு வைத்தல் இடம்பெறுகிறது. கொலு வைத்து வழிபடும் முறையை ஊக்குவிக்கும் பொருட்டு, ஆலயங்கள், பாடசாலைகள் தோறும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.





# நவராத்திரி பாமாலை

தொகுப்பாசிரியர்

ம.ஜெகநாதன் (ஜெக்கி)